IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF,
THIRUMANGALAM.
O.S.No.13/2015
DEPOSITION OF WITNESS

பி.வா.சா. 1 சாட்சி சரவணதேவி க.பெ.லோகமணி

**Solemnly affirmed and sworn by Thiru.E.Manikandan, B.A.,B.L, Principal District Munsif (FAC) on 11.03.2026 in accordance with the provisions of Act XX141.**

வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :

1. நான் எதுவரை படித்துள்ளேன் என்றால் 12ம் வகுப்பு வரை படித்துள்ளேன். தமிழ், ஆங்கிலம் படிக்க தெரியுமா என்றால் தெரியும். தாவா வழக்கின் 1ம்பிரதிவாதி எனது தாயார் என்றால் சரிதான். வழக்கு தாக்கல் செய்யும் நேரத்தில் நானும், எனது தாயாரும் ஒன்றாகத்தான் இருந்தோம் என்றால் சரியல்ல. நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வந்த பிறகுதான் ஆஜர் ஆனேன் என்றால் சரிதான்.

2. வழக்குரையில் 1ம்பிரதிவாதியின் முகவரியும், எனது முகவரியும் ஒரே மாதிரியாகக் காட்டடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வழக்குரையில் எனது முகவரியாக காட்டடப்பட்டுள்ள முகவரியில்தான் அழைப்பாணை சார்பு செய்யப்பட்டது என்றால் சரிதான். நானும், எனது தாயாரும் ஒரே முகவரியில்தான் இருந்தோம் என்றால் நான் மாடியிலும், எனது தாயார் கீழ்வீட்டிலும் வசித்து வந்தோம்.

3. வாதிகள் என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் வாரிசுகளான 10 பேருக்கும் பாகம் உள்ளதாக கூறி தாக்கல் செய்துள்ளனர். வழக்குச் சொத்து ஆதியில் வள்ளியம்மாளுக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். மேற்படி வள்ளியம்மாள் யார் என்றால்

1ம்பிரதிவாதியின் தாயார் ஆவார். வழக்குச் சொத்தை எனது தாயார் 1ம்பிரதிவாதிக்கு 1994ல் கிரையம் கொடுத்து விட்டார் என்றால் ஏமாற்றி வாங்கியுள்ளார்.

4. மேற்படி விபரம் குறித்து எனது தாயார் 2010ல் நிலமோசடி புகார் கொடுத்தாரா என்றால் கொடுத்தார். மேற்படி நிலமோசடி புகாரின் அடிப்படையில் வாதிகள் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. எனது தாயார் கொடுத்த புகாரின் அடிப்படையில் வழக்கு பதிவு செய்து மேற்படி புகாரானது உண்மையானதல்ல என்று இரத்து செய்து விட்டார்கள் என்றால் 10 பேருக்கு பங்குள்ள சொத்து என்று தீர்ப்பு வழங்கப்பட்டது.

5. மேற்படி 10பேரில் எனது தாயாரும் ஒருநபர் என்றால் சரிதான். வழக்குச் சொத்து வள்ளியம்மாள் மற்றும் அவருக்கு பிறகு எனது தாயார் பெயரில் வருவாய்துறை ஆவணங்கள் ஏற்பட்டது என்றால் சரிதான். வழக்குச் சொத்திற்கு தற்போதுவரை கஸ்தூரிபாய் அவரின் பெயரில்தான் வருவாய்துறை ஆவணங்கள் உள்ளது என்றால் இருக்கலாம்.

6. என்னிடம் காட்டப்படும் மனுவானது நான் மதுரை மாவட்ட ஆட்சியரிடம் கொடுத்த மனு என்றால் சரிதான். மேற்படி மனுவில் என்னுடைய தாயார் 30.03.1994ல் குடும்பச் செலவிற்காக கஸ்தூரிபாய் க.பெ.கருப்பையா அவர்களுக்கு ரூ.8,100/- மட்டும் பெற்றுக்கொண்டு பத்திரத்தில் கையொப்பம் செய்து கொடுத்திருக்கிறார் என்று கூறியுள்ளேனா என்றால் தெரியாது.

7. தாவாச் சொத்து வள்ளியம்மாள் இறந்த பிறகு 1ம்பிரதிவாதியின் அனுபவத்தில்தான் இருந்து வந்தது என்றால் சரிதான். 1ம்பிரதிவாதி அனுபவம் செய்து வந்ததால்தான் கஸ்தூரிபாய்க்கு கிரையம் கொடுத்தார் என்றால் சரிதான். மேற்படி கிரையம் வாங்கிய பிறகு கஸ்தூரிபாய் என்பவரிடம்தான் வழக்குச் சொத்து உள்ளது என்றால் சரியல்ல.

8. 1ம்பிரதிவாதிக்கும், அவரது கணவரான நடராஜன் என்பவருக்கும் எத்தனை வாரிசுகள் என்றால் 9பேர் ஆவார்கள். மேற்படி 9பேரில் என்னைத்தவிர மற்ற வாரிசுகள் யாரும் இவ்வழக்கில் தரப்பினராக இல்லை என்றால் சரியல்ல. தற்போது சரஸ்வதியம்மாள் உயிருடன் உள்ளாரா என்றால் உள்ளார்.

( வாதிகள் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின்படி குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.)

**மறுவிசாரணை: இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை
தட்டச்சு செய்து அவருக்கு படித்துக்காட்டி
அவர் சரியென்று ஒப்புக்கொண்டு இதில்
கையொப்பமிட்டார்.

ESWARAN MANIKANDAN
Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2026.03.11 18:39:57 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (FAC),
திருமங்கலம்.